IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC.6/2022 |
| Preliminary Register | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw10 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : **முத்துக்குமார்** |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர்கள் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.04.2023

நான் தற்பொழுது சென்னையில் வசித்து வருகிறேன். நான் சாப்ட்வேர் இன்ஜினியராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 எனது தங்கை. 1வது என் தங்கையின் கணவர். 2வது எதிரி மற்றும் 3வது எதிரி 1வது எதிரியின் அண்ணன்கள். 4வது எதிரி அ.சா.1ன் மாமியார். எதிரி 5 மற்றும் 6 – 1வது எதிரியின் அண்ணன்களின் மனைவிகள். 7வது எதிரி மகாலட்சுமி 1வது எதிரியின் 2வது மனைவி. 8 மற்றும் 9

எதிரிகள் 7ம் எதிரியின் பெற்றோர்கள். அ.சா.1க்கும், 1வது எதிரிக்கும் 26.2.2007ம் தேதி வெற்றிலையூரணியில் உள்ள சீனிவாசன் கோவிலில் வைத்து திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பின்னர் வெற்றிலையூரணியில் தனிக்குடித்தனம் நடத்தி வந்தனர். அடுத்த வருடமே ஆண் குழந்தை பிறந்தது. 7, 8 வருடங்களாக நன்றாக இருந்தனர். பின்னர் இருவருக்கும் இடையில் கருத்து வேறுபாடு வர ஆரம்பித்தது. வரதட்சினை கேட்டு எதிரிகள் 1 வது எதிரி முதல் 6வது எதிரி வரை கொடுமைப்படுத்தினர். 50 பவுன் நகையும், ஐந்து லட்சம் ரூபாய் ரொக்கமும் கூடுதலாக வரதட்சினையாக 1வது எதிரி மற்றும் மாமியார் மற்றும் மற்ற எதிரிகளும் கேட்டனர். அடித்து துன்புறுத்தி எங்கள் வீட்டிற்கு 2017ம் ஆண்டு அனுப்பி வைத்தனர். 6.6.2019ம் தேதி 1வது எதிரி மகாலட்சுமி என்ற பெண்ணை 2வதாக திருமணம் செய்து கொண்டார். அதை கேள்விபட்டு 8.6.2019ம் தேதி அ.சா.1 வெற்றிலையூரணியில் உள்ள 1வது எதிரியின் வீட்டிற்கு சென்று இப்படி நான் இருக்கும் போது என் மகன் இருக்கும் போது இன்னொரு கல்யாணம் முடிக்கலாம் என்று கேட்டுள்ளார் அப்போது அங்கு இருந்த எதிரிகள் ராதாருக்மணி, 1வது எதிரியின் மூத்த அண்ணன் திருலோகசந்திரன், 2வது அண்ணன் முத்துமாரியப்பன், முதல் அண்ணனின் மனைவி ஜமுனாதேவி, 2வது அண்ணனின் மனைவி மனோன்மணி, மாமியார் ராதாருக்மணி, மற்றும் 1வது எதிரி ஆகியோர் சேர்ந்து கூடுதலாக வரதட்சினை தராததால் 2வது கல்யாணம் முடித்து வைத்தோம் என்று சொல்லியுள்ளனர். பின்னர் அ.சா.1 எங்கள் வீட்டிற்கு வந்து மனவருத்தப்பட்டார். தற்கொலைக்கு முயன்றார். போலிசிடம் மறுநாள் சென்று புகார் அளிப்போம் என்று சொல்லி சமாதானப்படுத்தினேன். மறுநாள் சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர். எதிரிகள் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தால் அனைவரையும் அடையாளம் காண்பித்திருப்பேன்.

1 முதல் 6 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை

எனது சகோதரி சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து தற்கொலைக்கு முயன்றார் என்றால் 6ம் தேதி சம்பவம் நடந்து 9ம் தேதி தற்கொலைக்கு முயன்றார். தற்கொலைக்கு எவ்வாறு முயற்சித்தார் என்றால் மின்விசிறியில் தூக்கிட்டு கொள்ள முயன்றார். மின்விசிறியில் சேலையால் தூக்கிலிட

பகலில் முயற்சித்தார். அந்த சமயத்தில் எங்கள் வீட்டில் உள்ளவர்கள் எங்கிருந்தோம் என்றால் வாசலில் தான் இருந்தோம். உடனே காப்பாற்றி விட்டோம். மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை. அ.சா.1 தற்கொலைக்கு முயற்சிப்பதாக அ.சா.1 அளித்த புகாரிலும் எனது வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம். சம்பவம் நடந்து எந்த தேதியில் காவல் நிலையம் சென்றோம் என்றால் 10.6.2019 ம் தேதி திங்கட்கிழமை காலை 10, 11 மணியளவில் என் மாமா பாலசுப்பிரமணியம், வேண்டாராஜா, ஆகியோர்கள் காவல் நிலையம் சென்றார்கள். நான் போகவில்லை. என்னை போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். ஆனால் எந்த தேதி என்று ஞாபகம் இல்லை .நான் வாக்குமூலம் கொடுத்துள்ளேன். எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் சென்னையில் வேலை பார்த்ததால் போனில் கேள்விபட்டேன். நான் கேள்விபட்டது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 எனக்கு சகோதரி என்பதால் அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது வரை எனது சகோதரி சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 1 முதல் 6 எதிரிகள் மீது 4,5 முறைகள் புகார் அளித்து இருப்பார் என்றால் சரிதான். அவ்வாறாக அ.சா.1 கொடுத்த எந்த புகாரின் பேரிலும் காவல் துறையினர் நேரடியாக வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனது தங்கைக்கும், 1 வது எதிரிக்கும் 2007 ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். 2007 முதல் 2015 ம் ஆண்டு வரை அ.சா.1 மற்றும் 1 ம் எதிரி எந்த வித பிரச்சினையும் இன்றி நல்ல தம்பதிகளாக குடும்பம் நடத்தினார்கள் என்றால் சரிதான். 2015 ம் ஆண்டு அ.சா.1 ஐ விஸ்வநத்தத்தில் உள்ள மினிபஸ் டிரைவரான முத்துப்பாண்டி உடன் ஏற்பட்ட பழக்கத்தினால் அ.சா.1 ஐ சந்தேப்பட்டதின்பேரில் முதன்முதலில் அ.சா.1 க்கும், 1 வது எதிரிக்கும் பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரியல்ல. வரதட்சனையால்தான் பிரச்சினை நடந்தது. அ.சா.1 யாருடன் பேசினாலும் 1 ம் எதிரி சந்தேப்படுவார். 2015 ம் ஆண்டு அ.சா.1 ஒரு புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அந்த புகாரின் பேரில் அ.சா.1 தனக்கும் விஸ்வநத்தத்தை சேர்ந்த மினிபஸ் டிரைவர் முத்துப்பாண்டி என்பவருக்கும் தவறான தொடர்பு உள்ளது என்று ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்து அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். சமரசத்திற்காக அந்த சூழ்நிலையில்

அவ்வாறு எனது தங்கை எழுதிக்கொடுத்து நான் சாட்சி கையொப்பம் செய்தேன். அதற்கு பின்னிட்டும் அந்த பிரச்சனை நடந்து வந்தது. அதற்கு பின்பு அ.சா.1ம் 1ம் எதிரியும் சேர்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. வெற்றிலையூரணியில் சேர்ந்து தான் இருந்தார்கள். அ.சா.1ன் மாமியார் அ.சா.1 அடித்து மண்டையை உடைத்துள்ளார். அதனை 1ம் எதிரியின் சகோதரரான முத்துமாரியப்பன் தொலைபேசி மூலமாக என் அம்மா ஏற்கனவே எனது அண்ணனின் மனைவியை கொன்றுவிட்டதாக ஒரு கெட்ட பெயர் உள்ள நிலையில் உங்கள் மகள் இங்கிருந்தால் அவரையும் கொன்றுவிடுவார் அதனால் உங்கள் மகளை உங்கள் வீட்டிற்கு கூட்டி செல்லுங்கள் என்று என் அம்மாவுக்கு தெரிவித்து அ.சா.1ஐ பஸ் ஏற்றி அனுப்பி வைத்தார். இந்த விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. சாட்சி மீண்டும். சொன்னோம். சொன்னதை போலிசார் எழுதவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். 2015ம் ஆண்டு பிரச்சனை ஏற்பட்டு இன்றுவரை அ.சா.1 மற்றும் 1ம் எதிரி சேர்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. 2016 முதல் இன்றுவரை சேர்ந்து வாழவில்லை. 2017ம் ஆண்டு புகார் கொடுத்து சசி.23/2018 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்ட வழக்கில் 2வது திருமணத்தை தவிர்த்து மற்ற சம்பவங்கள் அனைத்தும் இந்த வழக்கில் உள்ள அதே சம்பவத்தை குறிப்பிட்டு நான் அ.சா.1, எனது தாய் மாமா முத்துசாமி, எனது பெற்றோர் ஆகியோர்கள் இதே நீதிமன்றத்தில் 1 முதல் 6 எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் 1 முதல் 6 எதிரிகள் விடுதலை செய்யப்பட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 7 முதல் 9 வரை எதிரிகளை எந்தகாலத்திலும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் கேள்விபட்டது போல் எந்த காலத்திலும் 1வது எதிரி 7ம் எதிரியை திருமணம் செய்துகொள்ள வில்லை என்றாலும், வழக்கிற்காக 1வது எதிரி 7ம் எதிரியை திருமணம் செய்து கொண்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிசி.23/2018 வழக்கு நிலுவயையில் இருந்தபோது 1ம் எதிரி 7ம் எதிரியை திருமணம் செய்து கொண்டார். எனது தாய்மாமா முத்துசாமிதான் 1ம் எதிரிக்கும், அ.சா.1க்கும் முன்நின்று திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். எனது தாய்மாமா முத்துசாமி எனது பெற்றோர்களோ, இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் சரியல்ல. அவர்களது சாட்சி வயதான காலத்தினால் தேவை இல்லை எங்களது சாட்சி

மட்டும் போதுமானது என்று நாங்கள் தான் சேர்க்கவில்லை. நான் கேள்விபட்டது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், இந்த வழக்கு பொய் வழக்கு என்பதால் எனது பெற்றோர்களோ எனது தாய் மாமா இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க மறுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது சகோதரி என்பதால் நான் கூடுதல் அக்கறை எடுத்துக்கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் கூடுதல் அக்கறை எடுத்துக்கொண்டது உண்மைதான். ஆனால் பொய் சாட்சியம் அளிக்கவில்லை. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனது சகோதரி எங்கு வைத்து தற்கொலைக்கு முயன்றார் என்றால் வளையபட்டியில் உள்ள எங்கள் வீட்டில் வைத்து தற்கொலைக்கு முயன்றார். அப்போது நான் சென்னையில் இருந்தேன் என்றால் சரிதான்.

7 முதல் 9 எதிரிகள் தரப்பில் 1 முதல் 6 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

மறுவிசாரணை – இல்லை.